**உதவி**

**TA5118**

**புத்தகம் தயாரித்தல்**

**செயல் திட்டம்:**

1. ஒவ்வொரு மாணவரும் தன்னுடைய வீட்டில் இருப்பவர்க்கு, அருகாமை வீட்டில் இருப்பவர்க்கு மற்றும் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளுக்கு, பறவைகள் போன்றவற்றிற்கு எவ்வாறு உதவி செய்வர் என்பதை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளச்செய்தல்.

2. பகிர்ந்தவற்றை எழுதி வரையச்செய்தல்.

3. அனைத்து மாணவர்கள் எழுதிய தகவல்களையும் தொகுத்துப் புத்தகமாகத் தயாரித்தல்.

4. தயாரித்த புத்தகத்தை வாசித்தல். மற்ற வகுப்புகளுக்கும் வாசிக்கக் கொடுத்தல்.

**செயல்பாடு:**

**எடுத்துக்காட்டு.**



என் தங்கைக்கு சாப்பாடு ஊட்டுவேன் – **சாரதா**.

நான் பள்ளி விட்டவுடன் வீட்டிற்குச் செல்வேன். அங்கு என் தங்கை கீதாவுடன் விளையாடுவேன். பின்னர் முறுக்கு, பிஸ்கட் போன்றவற்றைச் சாப்பிடுவேன். என் தங்கை சிறிய குழந்தை ஆகையால் பிஸ்கட், வாழைப்பழம் போன்றவற்றை அவளுக்கு ஊட்டுவேன்.

இது போன்று அம்மாவுக்கு உதவுவேன், கடைக்குச் செல்வேன் போன்ற உதவிகளை விவரித்து ஒவ்வொரு மாணவரையும் வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளச்செய்து பின்னர் எழுதச் சொல்ல வேண்டும்.

**அல்லது**

**உதவி மரம்**

வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின் உதவி மரம் என்ற ஒன்றை உருவாக்கி, அவர்கள் செய்த உதவி குறித்து சிறு காகிதத்தில் எழுதச்செய்து அவற்றை (Kindness Tree) அம்மரத்தில் இணைக்கச் செய்ய வேண்டும்.




**குறிப்பு** : மேற்குறிப்பிட்ட செயல்பாட்டை சிறப்பாகச் செய்யும் மாணவத் திறன்களுக்கு பரிசளிக்கப்படும்.